2014 ஆகஸ்ட் 6]

வழியாகக் கூடுதல் பேருந்து வசதியை ஏற்படுத்திக் கொடுக்குமாறு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்ட மக்களுடைய நலன் கருதி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த 3 ஆண்டுகளில் 110 புதிய வழித்தடங்களை மக்களுடைய பயன்பாட்டிற்காக வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வழித்தடங்கள் ஆய்வு செய்யப்பட்டு, பயணிகளுடைய எண்ணிக்கைக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 352, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

352—

விரிவாக்கம்

***30210**—**திரு. வி. முத்துக்குமார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் டான்காஃப் நிறுவன வளாகத்திலுள்ள நெல் சுத்திகரிப்பு நிலையத்தை விரிவாக்கம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலத்தில் டான்காஃப் வளாகத்தில் உள்ள நெல் சுத்திகரிப்பு நிலையத்தின் சுத்திகரிப்புத் திறன் 600 மெட்ரிக் டன் ஆகும். இதில், விருத்தாசலம் மற்றும் கம்மாபுரம் வட்டாரங்களில் இருந்து பெறப்படும் நெல் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, அப்பகுதி விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர். எனவே, விருத்தாசலத்தில் டான்காஃப் நிறுவனத்தில் செயல்பட்டு வரும் நெல் சுத்திகரிப்பு நிலையத்தின் தற்போதைய சுத்திகரிப்புத் திறன் மற்றும் விவசாயிகளின் விதைத் தேவையின் அடிப்படையில் உற்றுநோக்கும்போது நெல் சுத்திகரிப்பு நிலையத்தினை விரிவாக்கம் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார் அவர்கள்.*

திரு. வி. முத்துக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் அதிக அளவில் நெல் பயிரிடுகின்றனர். அவர்கள் தரமான நெல் விதைகள் கிடைக்காமல் கஷ்டப்படுகின்றனர். கடலூர் மாவட்டத்தில் மட்டும் சுமார் இரண்டு இலட்சத்து 85 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் விவசாயிகள் சம்பா நெல் சாகுபடி செய்கின்றனர். ஒரு வருடத்திற்கு 3 பட்டங்களில் நெல் சாகுபடி செய்கின்றனர். ஆகவே, தரமான, தூய்மையான, உயர் இரக நெல் விதைகளை உற்பத்திச் செய்து அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க வேண்டுமென்ற நோக்கத்தில் அந்த நெல் சுத்திகரிப்பு நிலையத்தினை விரிவாக்கம் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், விருத்தாசலம் டான்காஃப் வளாகத்தில் செயல்பட்டுவரும் சுத்திகரிப்பு நிலையம் தமிழக அரசு வேளாண்மைத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இங்கு விருத்தாசலம், கம்மாபுரம் வட்டாரங்களிலிருந்து*

2014 ஆகஸ்ட் 6]

பெறப்படும் சுமார் 600 மெட்ரிக் டன் அளவு நெல் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, சான்றளிக்கப்பட்டு, விவசாயிகளுக்குச் சான்று விதையாக விநியோகம் செய்யப்பட்டு, அப்பகுதி விவசாயிகளின் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. விளைச்சலுக்கான முக்கியக் காரணமாக விளங்குவது மட்டுமின்றி, தரமான மற்றும் சீரான உற்பத்திக்கும் சந்தை மதிப்பினை அதிகரிப்பதிலும் விதையானது முக்கியப் பங்கு வகிக்கிறது. விதை ஒன்று போட்டால் சுரை ஒன்றா முளைக்கும்? விதைதான் வேளாண்மைக்குப் பிரதானம். சான்று பெற்ற விதைகளை உற்பத்திச் செய்வதில் விதை சுத்திகரிப்பு நிலையங்களும் முக்கிய அங்கம் வகிக்கின்றன. இரண்டு மடங்கு உற்பத்தி, மூன்று மடங்கு வருமானம் என்ற இலட்சியநோக்கில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்பட்டு வருகிறது. "நல்ல நல்ல நிலம் பார்த்து நாமும் விதை விதைக்கணும்" என்று கலப்பை பிடிக்கும் விவசாயிகளின் (மேசையைத் தட்டும் ஒலி) களைப்பைப் போக்க, உற்பத்திதான் முக்கியம் அதற்கு விதைதான் முக்கியம் என்பதை உணர்ந்துதான் விவசாயிகளின் விவேகம், வியர்வையின் மதிப்பறிந்த, விவசாயிகளின் விடிவெள்ளி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேளாண்மைத் துறையின்மூலம் கடலூர் மாவட்டத்தில் செயல்படும் 3 நெல் சுத்திகரிப்பு நிலையங்களின் மூலமாக 1,800 மெட்ரிக் டன் வரை சுத்திகரிப்பு செய்ய ஆணையிட்டு, அம்மாவட்ட மக்களின் தேவையைப் பூர்த்தி செய்துள்ளார்கள். மாற்றான் தோட்டத்து மல்லிகையாக விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதி இருந்தாலுங்கூட, தமிழகத்திலுள்ள 234 தொகுதிகளும் மாண்புமிகு அம்மா அவர்களின் கோட்டைகள்தான் என்பதாலும், (மேசையைத் தட்டும் ஒலி) நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதி ஏறக்குறைய 38,000 வாக்குகள் கூடுதலாக மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தந்த காரணத்தினாலும், (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே, கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையிலும், வரும் காலங்களில் அப்பகுதியில் விதை உற்பத்தி அதிகமாக செய்யப்படும் சூழ்நிலையில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையினைப் பெற்று, விதை நெல் சுத்திகரிப்பு நிலையம் விரிவாக்கம் செய்யப்படும் என்பதை மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்து அமர்கிறேன்.

[2014 ஆகஸ்ட் 6

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார் அவர்கள்.*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. வி. முத்துக்குமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது சட்டமன்ற உறுப்பினரின் தனிப்பட்ட கோரிக்கை அல்ல. அந்த மாவட்ட விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையாகும். நெல் சுத்திகரிப்பு நிலையத்தை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று விவசாயிகள் தினமும் அங்கே போராடிக்கொண்டிருக்கிறார்கள், மறைமுகமாகவும் போராடிக்கொண்டிருக்கிறார்கள். உணவுப்பொருள் உற்பத்தி பெருக வேண்டும் என்றால், நிச்சயமாக தரமான விதைகள் வேண்டும். அனைத்து விவசாயிகளுக்கும் கொடுப்பதற்கு விதை நெல் அங்கே பற்றாக்குறையாக இருக்கிறது. எனவே, டான்காஃப் வளாகத்திலுள்ள நெல் சுத்திகரிப்பு நிலையத்தை அவசியம் விரிவாக்கம் செய்ய வேண்டும் என்பது விவசாயிகளின் கோரிக்கை. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு கவிஞர் அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 30 மாவட்டங்களில், சென்னை, நீலகிரி நீங்கலாக 81 அரசு விதை சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன. விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் விதைகள் ஆண்டுக்கு 29,600 மெட்ரிக் டன் சுத்திகரிப்புத் திறன் கொண்ட 14 பெரிய, 2 நடுத்தர மற்றும் 63 சிறிய விதை சுத்திகரிப்பு நிலையங்களின் மூலமாகத் தமிழக விவசாயிகளினுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியில் மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 353, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*